***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT***
***Mannargudi***
***CC.No.137/2023 – P.W. 3 (LW-4)***

| | |
|---|---|
| *Name* | ராதிகா |
| *Father/Husband's Name* | அறிவழகன் |
| *Village* | ஆலத்தூர் |
| *Taluk* | *மன்னார்குடி* |
| *Religion* | |
| *Age* | *43* |

**எதிரிகள் ஆஜர். இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 23.02.2026*

1. நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 செந்தில்குமார், அ.சா.2 கனிமொழி மற்றும் சாட்சி சுதா, எதிரிகள் மாதவன், ரம்யா, ரவி, இளஞ்செழியன் ஆகியோர்களை தெரியும். மேற்படி நபர்கள் அனைவரும் எனது ஊரைச்சேர்ந்தவர்கள். சுமார் 2 வருடங்களுக்கு முன்பாக தேதி, மாதம் ஞாபகமில்லை. ஒருநாள் நான் வெளியில் சென்றுவிட்டு வீட்டிற்கு இரவு தான் வந்தேன். அப்போது தெருவில் ஓரே கூட்டமாக இருந்தததது. அந்த கூட்டத்தில் போலிசாரும் இருந்தார்கள். நான் தெருக்காரர்களிடம் விசாரித்தபோது எதிரிகளுக்கும், கனிமொழி என்பவருக்கும் பிரச்சனை ஏற்பட்டதென்ற விவரம் தெரிந்துக்கொண்டேன். அதில் யாருக்கு என்ன காயம் ஏற்பட்டதென்ற விவரம் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 மற்றும் குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 162 ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u>

. போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் செந்தில்குமார் குடும்பத்தினருக்கும், ஆஜர் எதிரிகள் குடும்பத்தினருக்கும் இடையே இடப்பிரச்சனை சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வருகிறது என்றும், அதனால் இருகுடும்பத்தினருக்கும் அடிக்கடி சண்டை ஏற்படும் என்றும், இந்நிலையில் கடந்த 03.04.2023-ம் தேதியன்று இரவு 7.30 மணியளவில் செந்தில்குமார் மனைவி கனிமொழி என்பவரிடம் எதிரிகள் அ.சா.1 னின் வீட்டு வாசல் முன்பாக நின்றுக்கொண்டு, அ.சா.2 ஐ கொச்சை வார்த்தைகளால் திட்டியும், அ.சா.2 ஐ இழிவாக பேசியும், வீட்டிலிருந்து வெளியே வந்த அ.சா.2 ஐ ஆஜர் எதிரிகள் முடியை பிடித்து இழுத்து கீழே தள்ளி நைட்டியை கிழித்து கையால் அடித்தார்கள் என்றும், அதை தடுக்க சென்ற அ.சா.2 னின் கணவர் அ.சா.1 செந்தில்குமாரையும் ஆஜர் எதிரிகள் கொச்சை வார்த்தைகளால் திட்டியும், கையால் அடித்தார்கள் என்றும், அதை நானும் சுதாவும் தடுத்தோம் என்றும், உண்மை சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக கூறிவிட்டு தற்சமயம் இருதரப்பினர்களும் எனக்கு தெரிந்த நபர்கள் என்ற காரணத்தினாலும், இருதரப்பினர்களிடம் பொல்லாப்பு பெறாமல் இருப்பதற்காகவும், உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இல்லை.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 23.02.2026

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.